ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது
අංක 2296/34 – 2022 සැප්තැම්බර් මස 09 වැනි සිකුරාදා – 2022.09.09
2296/34 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவு (அ) வின் கீழான கட்டளை*

***2022 ஆம் ஆண்டின் 142 ஆம் இலக்கக் கட்டளை***

*எனது குறிப்பு இல.: 03J/91/E/202.*
*பிர. செய. குறி. இல.: බල2/1/28.*

*காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவு (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், கீழ் விபரிக்கப் பட்டுள்ள அட்டவணையில் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ்வட்டணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் இருப்பாட்சியைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

*ஹரின் பெர்னாண்டோ,*
*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.*

*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,*
*"மிஹிகத மெதுர",*
*1200/6, காணிச் செயலகம்,*
*ரஜமல்வத்தை வீதி,*
*பத்தரமுல்லை,*
*2022, ஓகத்து 22.*

**அட்டவணை**

*1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், பலபிட்டிய.*

*2. **காணியின் விபரம்** : தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், பலபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், பிரிவு இல. 23, மாதுாவ கிராம அலுவலர் பிரிவில், மாதுாவ கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2018.09.26 ஆந் திகதிய ஆ. வ. கா. 4380 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் விபரிக்கப்பட்ட காணித் துண்டின் எல்லைகள் :*

*01. **துண்டு இல. 01 - அங்கி ஆச்சிகே வத்தை - விஸ்தீரணம் : 0.2480 ஹெக்டயார்***

*வடக்கு : டபிள்யூ. ஜினசேன டி சில்வா மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் தனபொட்டுவத்தை மற்றும் டபிள்யூ. மாட்டின் டி சில்வா மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் தெல்முலேவத்தை ; கிழக்கு : வீதி ; தெற்கு : வீதி (பி. ச.) ; மேற்கு : என். லசிங்கட்டன் மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் லிங்தொட்டவத்தை.*

EOG 09 - 0077

1A – G 37428 – 19 (2022/09) *இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*
*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*